நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வளம் தரும் வாழை நார்!**

First Published : 04 Aug 2011 01:56:36 AM IST

கடலூர்: வாழை மரங்களில் குலைகள் வெட்டிய பின், வாழை மட்டைகளை குப்பையாகக் கருதப்பட்டு வந்த காலம் ஒன்று.

ஆனால் குப்பையாக்கப்படும் அந்த வாழை மட்டைகளை மூலப் பொருளாகக் கொண்டு, சிறந்த வருவாய் ஈட்டும் சிறு தொழிற்சாலையையே நடத்தலாம் என்று பரிந்துரைக்கிறது வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை.

தமிழகத்தில் சுமார் 2.80 லட்சம் ஏக்கரில், வாழை மரங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. ஒரு ஏக்கருக்கு 1,000 வாழைக் கன்றுகள் நடப்படுகிறது.

அனைத்து ரக வாழையில் இருந்தும் நார் பிரித்து எடுக்க முடியும். வாழையின் தண்டுப் பகுதியை அறுவடை செய்தபின் 48 மணி நேரத்தில் நார் பிரித்து எடுக்கப்பட வேண்டும். வாழை நாரில் இருந்து நீர்ப் பகுதி வெளியேற சூரிய வெளிச்சத்திலோ, நிழலிலோ காய வைக்க வேண்டும்.

÷வாழை நாரில் 62 சதவீதம் செல்லுலோஸ், 29 சதவீதம் லிக்னின், 3 சதவீதம் ஹெமி செல்லுலோஸ், 2 சதவீதம் பெக்டின், 4 சதவீதம் இதர ரசாயனங்கள் உள்ளன. வாழை நார் சணல் போல் பயன்படுத்தப்படுகிறது. சணலை விட பன்மடங்கு உறுதியானது என்றும் கண்டறியப்பட்டு இருக்கிறது. வாழை நாரில் இருந்து துணிகள் தயாரிக்கப் படுகிறது.

நாரில் தயாரிக்கப்படும் பொருள்கள்:

சாக்குப் பைகள், மிதியடிகள், தரை விரிப்புகள், வீட்டு அலங்கார விரிப்புகள், அலங்கார பைகள், டிஸ்ஸ்ய் பேப்பர், பில்டர் பேப்பர், அலங்கார பேப்பர் போன்றவை தயாரிக்கப்படுகின்றன.

ஒரு மரத்தில் இருந்து 300 கிராம் வாழை நார் கிடைக்கும். வாழை நாரை பிரித்தெடுக்கும் இயந்திரம், வாழை அறுவடைக்கு பின்னர், வாழையின் தேவையில்லாத பகுதிகளான இலைகளின் தண்டுப்பகுதி, இலைக் காம்புப் பகுதி, வாழைத்தாரின் காம்புப் பகுதி, ஆகியவற்றில் இருந்து நாரை பிரித்தெடுக்கும் தன்மைக் கொண்டது.

இந்த இயந்திரத்தின் விலை ரூ. 40 ஆயிரம். வாழை நாரை பிரித்தெடுக்கும் இயந்திரம் மூலம் 8 முதல் 10 மணி நேரத்தில் 100 வாழை மரங்களில் இருந்து, 15 முதல் 20 கிலோ நாரைப் பிரித்து எடுக்கலாம். இந்த இயந்திரத்தை பெண்களும் எளிதில் இயக்கலாம்.

÷கையினால் நாரைப் பிரித்தெடுப்பதைவிட 40 சதவீதம் அதிக நார், இந்த இயந்திரம் மூலம் பிரித்தெடுக்கப்படுகிறது. இந்த இயந்திரத்தால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்காது.

விலை எவ்வளவு?

வாழை மட்டை நார் முதல் தரம், டன் ரூ. 70 ஆயிரம் முதல் ரூ. 80 ஆயிரம் வரையிலும், 2-ம் தரம் ரூ. 60 ஆயிரம் முதல் ரூ. 70 ஆயிரம் வரையிலும், வாழைத் தார் காம்பு நார், முதல் தரம் ரூ. 50 ஆயிரம் முதல் ரூ. 60 ஆயிரம் வரையிலும், வாழை இலைக் காம்பு நார் மற்றும் வாழை நார் கழிவு ரூ. 20 ஆயிரம் முதல் ரூ. 25 ஆயிரம் வரை விலையில் கொள்முதல் செய்யப்படுகிறது.

வாழை நார் பிரித்தெடுக்கும் தொழிலுக்கு முதலீடு இயந்திரத்துக்கான விலை ரூ. 40 ஆயிரம் மட்டுமே. வேலையாட்கள் 3 பெண்கள் போதும். நாளொன்றுக்கு 15 கிலோ நார் உற்பத்தி எனக் கணக்கிட்டால், அதன் விலை ரூ. 900. ஆள் சம்பளம், மின்சாரம் மற்றும் இயந்திரப் பராமரிப்புச் செலவுகள் நாளொன்றுக்கு ரூ. 345. நிகர வருவாய் நாளொன்றுக்கு ரூ. 655 என்றும் வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை தெரிவிக்கிறது.

வாழை நார்களை ஜெய்ப்பூரைச் சேர்ந்த பல நிறுவனங்கள் கொள்முதல் செய்கின்றன என்றும் அத்துறையின் தகவல் தெரிவிக்கிறது.

100 ஆண்டுகளுக்கு மேல் நீடித்து உழைக்கக்கூடிய ரூபாய் நோட்டுகள் வாழை நாரில் இருந்து தயாரிக்க முடியும் என்று, குஜராத் பல்கலைக்கழகம் கண்டுபிடித்து உள்ளது.

வாழை நாரில் இருந்து உயர்தர காகிதம் தயாரிக்க முடியும், சாதாரண காகிதத்தைவிட வாழைநார் காகிதம் தரத்தில் சிறந்ததாகவும் பல மடங்கு நீடித்து உழைக்கும் தன்மை கொண்டது என்றும், அப்பல்கலைக்கழக ஆய்வு தெரிவிக்கிறது.

÷வாழை நார் காகிதத்தை 100 ஆண்டுகளுக்கு மேல் கசங்காமல், கிழியாமல் பயன்படுத்த முடியும் என்றும், இயற்கை நார்களிலேயே அதிக வாழ்நாள் கொண்டது வாழைநார், வாழைநாரில் தயாரிக்கும் ரூபாய் நோட்டுகளை 3 ஆயிரம் முறை மடிக்க முடியும் என்றும் அந்த ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

## சிறிய முதலீட்டில் மண்புழு உரம் தயாரிப்பு

First Published : 04 Aug 2011 01:55:02 AM IST

திண்டிவனம்: தற்போது மண் வளம் அதிக அளவு பாதிக்கப்பட்டுள்ளதும் அதனால் ஏற்படும் மகசூல் பாதிப்பும் இந்திய விவசாயத்தில் மிகப்பெரிய கவலைக்குரிய நிகழ்வாக உள்ளது.

எனவே மண்வளத்தைப் பாதுகாப்பதன் அவசியமும் தற்போது அதிக அளவில் பேசப்பட்டு வருகிறது. இதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படும் நீர்வள நிலவளத்திட்டத்தின் மூலம் இப்பயிற்சியினை வேளாண் அதிகாரிகளுக்கு நடத்த திட்டமிடப்பட்டு செயல்விளக்கம் நடைபெற்று வருகிறது என திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ராமமூர்த்தி தெரிவித்தார்.

மண்புழுக்கள் உழவனின் நண்பன் என்ற போதிலும் சமீபகாலாமாக மண்ணில் இதன் எண்ணிக்கை குறைந்ததினால் மண்வளம் குன்றிவிட்டது எனலாம்.இத்தகைய சூழலில் மண்புழு உர தயாரிப்பினை பெரிய அளவில் செய்து வருவது வியாபார நோக்கமாகும்.இதனால் விவசாயிகள் விலை கொடுத்து வாங்குவதற்கு தயக்கம் காண்பித்து வருகின்றனர்.இதனை தவிர்க்கும் வகையில் அவரவர் இல்லங்களிலேயே சிறிய முதலீட்டில் தங்கள் வயலுக்கு தேவையான மண்புழு உரத்தினை தயாரிக்க சுலபமான முறைதான் சில்பாலின் தொழில் நுட்பமென பேராசிரியர் அன்புமணி தெரிவித்தார்.

மேலும் அவர் பயிற்சி பெற வந்த வேளாண் அதிகாரிகளிடம் கூறுகையில்:

இந்த உரத்தை நிழலான எந்த இடத்திலும் தயாரிக்கலாம். விளை நிலங்கள்,தோட்டம் ஆகிய பகுதிகளில் சிறிய இடம் இருந்தால் போதும். பாலிதீன் வகையில் சில்பாலின் என்ற பிளாஸ்டிக் பை ஒன்றை 12 அடி நீளம்,4 அடி அகலம், 3 அடி உயரம் என்ற அளவில் தயார் செய்து கொள்ள வேண்டும்.

நிழலான இடத்தில் 15 அடி நீளமுள்ள மூங்கில் கம்பு நான்கை நட்டு,பாலிதீன் பையை சுற்றி தொட்டி போன்ற அமைப்பில் உருவாக்க வேண்டும்.பின் இதில் ஒரு டன் அளவுள்ள மாடு, பன்றி, ஆடு, வாத்து கழிவுகளும், பருத்தி, வைக்கோல், சோளம், கருப்பு தோகை, இலை தழைகள், சமையலறை கழிவுகள் ஆகியவற்றையும், சாணம் மற்றும் கழிவுகள் தலா ஒரு அடுக்கு என்ற முறையில் 6 அடுக்குகளாக போட வேண்டும்.

காலை, மாலைகளில் ஈரப்பதம் வரும் அளவிற்கு தண்ணீர் ஊற்ற வேண்டும். தொட்டியின் மேல் பகுதியை கோழி மற்றும் பறவைகள் கிளறா வண்ணம் சாக்கு அல்லது நைலான் வலை கொண்டு மூட வேண்டும்.டன் ஒன்றுக்கு 1 கிலோ மண்புழு தேவைப்படும்.

இவ்வாறு செய்த பின் 45 நாட்களில் உரம் உருவாகும்.டன் ஒன்றுக்கு 600 கிலோ மண்புழு உரம் தயாரிக்கலாம். இதற்கு ஆகும் மொத்த செலவு 800 ரூபாய் தான் என்றார்.

தினமலர்

**விவசாயிகள் "ஆடிப்பட்டம்' விழா**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2011,01:08 IST

பள்ளிப்பட்டு : தோட்டக்கலை சார்பில் நடந்த, ஆடிப்பட்டம் விழாவில் விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானிய விலையில் விதைகள் வழங்கப்பட்டது. பள்ளிப்பட்டு அடுத்த, சின்னநாகபூடி கிராமத்தில் தோட்டக்கலை மற்றும் இந்தியன் வங்கி சார்பில் விவசாயிகளுக்கான, ஆடிப்பட்டம்

விழா நடந்தது. விழாவிற்கு, தோட்டக்கலை துணை இயக்குனர் ரஞ்சன்பால் தலைமை வகித்தார். துணை வேளாண்மை அலுவலர் சிவபெருமான் முன்னிலை வகித்தார்.
தோட்டக்கலை உதவி இயக்குனர் நவநீதகண்ணன் வரவேற்றார். இந்த விழாவில் "ஆடிப்பட்டம் தேடி விதைக்கணும்' என்கிற பாடல் வரிகளுக்கு ஏற்ப, ஆடிமாதத்தில் விதைக்க வேண்டிய காய்கனிகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

தர்ப்பூசணி, மிளகாய், கத்தரி, வெண்டைக்காய், தக்காளி மற்றும் கீரை போன்ற தோட்டக்கலை பயிர்களுக்கு, 50 சதவீத மானியத்தில் விதைகள் வழங்கப்பட்டது. மாட்டுத் தீவனப் பயிர் விதைகள் இலவசமாக வழங்கப்பட்டது.
விவசாயிகளுக்கு, ஒரு லட்சத்து 32 ஆயிரம் ரூபாய்க்கு கடன் அட்டை வழங்கப்பட்டது. விழாவில் டிராக்டர், கல்விக்கடன் மற்றும் சுயஉதவிக்குழு பெண்களுக்கு நிதியுதவி ஆகியவை வழங்கப்பட்டது. இதில், மீன்வளத்துறை அதிகாரி ஜனார்த்தனம், வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் ஆதித்தன், விவசாயிகள் சங்க மாவட்ட துணைத் தலைவர் வாசு மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**காய்கறி விதைகள் முனைப்பு விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2011,01:22 IST

திருப்பரங்குன்றம் : திருப்பரங்குன்றம் அருகே தென்பழஞ்சியில், தோட்டக்கலை துறை சார்பில் காய்கறி விதை நடவு குறித்த விழிப்புணர்வு முகாம் நடந்தது.ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ஆடிப்பட்டத்தில் காய்கறி விதைகள் முனைப்பு முகாம், தொழில் நுட்ப பயிற்சிகளை, திருப்பரங்குன்றம் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் மோகன்குமார் தொடங்கி வைத்தார். வீட்டு தோட்ட விதைகளான பாகை, புடலை, பீர்க்கை, கத்தரி, மிளகாய், கீரை, வெண்டை பயிரிடும் முறை, உரமிடுதல், பாதுகாத்தல் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. ஆடிப்பெருக்கை முன்னிட்டு, அப்பகுதியில் விதைகள் நடப்பட்டது. உதவி அலுவலர்கள் முருகேசன், சலீம் ராஜ், பாலகிருஷ்ணன், உதவி வேளாண்மை அலுவலர்கள் முருகேசன், சுருளீஸ்வரன், நீர்வள, நிலவள திட்ட தலைவர் பாண்டி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வாடும் நெற்பயிருக்கு "டேங்கர்' தண்ணீர் : பரிதாப பழநி விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2011,01:00 IST

பழநி : பழநியில் தண்ணீரின்றி கருகும் நெற்பயிரை காக்க "டேங்கர்' மூலம் விவசாயிகள் நீர் பாய்ச்சுகின்றனர். சண்முகநதி, பாலசமுத்திரம், தாமரைக்குளம், ராசாபுதூர், புதைச்சி, அழகாபுரி, புளியம்பட்டி, ஆண்டிபட்டியில் 15 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பாலாறுபொருந்தலாறு அணையை நம்பி விவசாயம் நடக்கிறது. இரண்டு மாதங்களுக்கு முன், அணையில் ஓரளவு நீர் இருந்ததால், விவசாயிகள் நெல் சாகுபடியை துவக்கினர்.அணையில் உள்ள தாடாகுளம் கண்மாய் "ஷட்டர்' சேதத்தால், தண்ணீர் வெளியேறியது. தற்போது அணையின் நீர்மட்டம் குறைந்து, விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்கவில்லை. புதைச்சி, தாமரைக்குளம் பகுதியில் 2000 ஏக்கரில் நெற்பயிர் கருகி வீணானது. ஏ.கலையம்புத்தூரில் ஏ.டி.டி., 37 ரக நெற்பயிர், பால்பிடிக்கும் பருவதில் வாடத் துவங்கியுள்ளது. சில விவசாயிகள், நெற்பயிரைக் காக்க "டேங்கர்' மூலம் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். இதுகுறித்து விவசாயி ஆறுமுகம் கூறுகையில், ""ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை செலவிட்டுள்ளோம். தற்போது ஏக்கருக்கு ஐந்து "டேங்கர்' களில் தண்ணீர் பாய்ச்ச வேண்டியுள்ளது. இதற்கு 2000 ரூபாய் வீதம் செலவாகிறது. பாலாறு அணையில் மணல் மேவி இருந்ததால், சில வாரங்களுக்கு முன் நீர்மட்டம் உயர்ந்தது. இதை நம்பி விவசாயத்தை துவக்கினோம். மணலை அகற்றாததால் ஏமாந்து விட்டோம்,'' என்றார்.

**தோட்டக்கலை திட்டங்களுக்கு சிறப்பு நிதி ரூ.7.04 கோடி ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2011,00:56 IST

திண்டுக்கல் : மாவட்டத்தில் பழத்தோட்டம், பசுமைகுடில், மண்புழு உரக்கூடம் அமைக்க 7.04 கோடி ரூபா ய் ஒதுக்கப்பட்டுள்ளது.ஒட்டன்சத்திரம் அருகே கேதையுறம்பு கிராமத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் ஒரு எக்டேரில் மா; மற்றொரு தோட்டத்தில் நெல்லி மரங்களை, கலெ க்டர் நாகராஜன் ஆய்வு செய்தார்.அவர் கூறியது: தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 472 எக்டேரில் 545 விவசாயிகள் 1.14 கோடி மானியம் பெற்று, தக்காளி, வெண்டைக்காய், மிளகாய், வாழை, செடி முருங்கை, வெங்காயம் பயிர் செய்துள்ளனர். இத்திட்டத்தின் மூலம் 1,459 விவசாயிகளுக்கு 5.66 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.மா, நெல்லி, கொக் கோ, மிளகாய் பயிர்கள் 2,540 எக்டேரில் புதிய தோட்டம் அமைக்கப்பட்டு, 5.15 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பழத்தோட்டம், பசுமைகுடில், மண்புழு உரக்கூடம் அமைத்தல்; ஊட்டச்சத்து மேலாண்மை திட்டங்களை செயல்படுத்த, மாவட்டத்திற்கு 7.04 கோடி

ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது, என்றார்.தோட்டக்கலை துணை இயக்குனர் சந்திரசேகரன், உதவி இயக்குனர்கள் சின்னராஜ், பழனிச்சாமி உடன் இருந்தனர்.

**ஏலக்காய் சாகுபடியில் "பம்பர் மகசூல்' 30 நாட்களில் 1,600 டன் வரத்து**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2011,00:40 IST

கம்பம் : ஏலக்காய் சாகுபடியில் "பம்பர் மகசூல்' கிடைத்து வருகிறது. முப்பது நாட்களில் 1,600 டன் வரத்து கிடைத்துள்ளது. கேரளா இடுக்கி மாவட்டத்தில், ஆயிரக்கணக்கான ஏக்கரில் ஏலக்காய் சாகுபடி நடக்கிறது. 2010 ல் சராசரியாக கிலோவிற்கு, 1,400 ரூபாய் கிடைத்தது. தற்போது 700 ரூபாய் கிடைக்கிறது. நடப்பு சீசனில் முதல் ரவுண்ட் காய் எடுப்பு சில தினங்களில் நிறைவடைகிறது. மார்க்கெட்டிற்கு காய் வரத்து அதிகமாக உள்ளது. கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் 1,600 டன் ஏலக்காய் மார்க்கெட்டிற்கு வந்துள்ளது. கடந்த ஆண்டில் 195 டன் மட்டுமே வரத்து இருந்தது. எனவே இது சாதனை அளவாக கருதப்படுகிறது. கடந்த வாரம் மட்டும் வெளிநாடுகளுக்கு 100 டன் வரை ஏற்றுமதிக்கான ஆர்டர்கள் கிடைத்துள்ளன. தற்போதைய சீசனில் 15 ஆயிரம் டன் வரை உற்பத்தி இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்த சாதனை மகசூலுக்கு விவசாயிகள் மேற்கொண்ட சாகுபடி முறைகளும், மழையும் காரணம் என கூறுகின்றனர். ஏலக்காய் மார்க்கெட்டிங் அதிகாரிகள் கூறுகையில், ""தற்போது வாரத்திற்கு 350 டன் வரத்து உள்ளது. ஏற்றுமதி ஆர்டர்கள் கிடைப்பதால், நல்ல விலை கிடைக்க வாய்ப்பு உள்ளது," என்றனர்.

**வெங்காயம் விலை பாதியாக வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2011,00:39 IST

தேனி : தமிழகத்தில் வெங்காயம் விளைச்சல் அதிகரித்துள்ளதால், விலை பாதியாக வீழ்ச்சி அடைந்துள்ளது.தமிழகத்தில் கோவை, உடுமலைப்பேட்டை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களிலும், ஆந்திரா, கர்நாடகாவிலும் வெங்காயம் விளைச்சல் அதிகரித்துள்ளது. அனைத்து இடங்களிலும் அறுவடை நடந்து வருகிறது. ஆந்திரா, கர்நாடகா சந்தைகளில் இருந்து சென்னை மார்க்கெட்டிற்கு வெங்காயம் வந்து கொண்டிருக்கிறது. இதனால் தேனி, திண்டுக்கல், கோவை மாவட்டங்களில் இருந்து சென்னை மார்க்கெட்டிற்கு செல்வது குறைந்துள்ளது. சென்னை மார்க்கெட்டிற்கு அனுப்ப முடியாததால், உள்ளூர் மார்க்கெட்டில் விற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தேனி உட்பட பல மாவட்டங்களில் வெங்காயத்தின் விலை விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. தேனி மொத்த மார்க்கெட்டில் கிலோ 10 ரூபாய்க்கும்,சில்லரை

மார்க்கெட்டில் 15க்கும் விற்கப்படுகிறது. விளைச்சல் அதிகம் உள்ளதால், விவசாயிகளுக்கும் பாதிப்பில்லை. விலை குறைவால் பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**கேசரி ஆப்பிள் வரத்து ஈரோட்டில் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2011,02:17 IST

ஈரோடு: சீஸன் துவங்கியுள்ளதால் பெங்களூருவில் இருந்து அதிகளவு கேசரி ஆப்பிள் பழம் ஈரோட்டுக்கு விற்பனைக்கு வந்துள்ளது.பெரும்பாலும் காஷ்மீர், சிம்லா போன்ற பகுதிகளில்தான் அதிகமாக ஆப்பிள் விளைச்சலாகிறது. நாளடைவில் பெங்களூரு, கேரளா போன்ற பகுதியிலும் ஆப்பிள் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். சிறிய ஆப்பிள் ரகங்களான "கேசரி' ஆப்பிள் அதிக இனிப்புத் தன்மை கொண்டது. சிறியவர்கள் முதல் பெறியவர்கள் விரும்பி சாப்பிடுகின்றனர்.

பெங்களூருவில் பயிராகும், "கேசரி' ஆப்பிள் பழம் விளைச்சல் அதிகரித்துள்ளது. அங்கிருந்து தினசரி இரண்டு முதல் மூன்று லாரிகள் வரை ஈரோட்டுக்கு கொண்டு வரப்படுகிறது. வரும் நாட்களில் மேலும் வரத்து அதிகரிக்கும் என, வியாபாரிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.கிலோ 60 முதல் 80 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. மொத்த வியாபாரிகளிடம் இருந்து வாங்கிச் செல்லும் சில்லரை வியாபாரிகள் தள்ளு வண்டிகளிலும், முக்கிய இடங்களில் வைத்து அவற்றை விற்பனை செய்கின்றனர்.
வடமாநிலங்களில் இருந்தும், கேரளாவில் இருந்தும் ஆப்பிள் பழம் வரும்பட்சத்தில், இவற்றின் விலை சரிய வாய்ப்புள்ளது.

**வேளாண் அறிவியல் கல்லூரி மாணவியர் விவசாய தொழில்நுட்பம் அறிய வருகை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 04,2011,02:00 IST

மோகனூர்:அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதி ஆண்டு படிக்கும் மாணவியர், கிராம தங்கல் திட்டத்தில், கிராமங்களில் மேற்கொள்ளப்படும் தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வதற்காக, மோகனூர் வந்துள்ளனர்.தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கு உட்பட்ட திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதி ஆண்டு படிக்கும் மாணவியர், ஆண்டு தோறும் ஏதாவது ஒரு கிராமத்தில் தங்கி, அப்பகுதியில் சாகுபடி செய்யப்படும் பயிர் வகைகள், அதில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள் குறித்து நேரடியாக கள ஆய்வு செய்து வருகின்றனர்.அதற்காக "கிராம தங்கல்'

திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி, தற்போது அக்கல்லூரியில் இறுதி ஆண்டு பிடிக்கும் மாணவியர், 10 பேர், கிராம தங்கல் திட்டத்துக்காக மோகனூர் வந்துள்ளனர்.
அவர்கள், கல்லூரி முதல்வர் ஜெயபால், திட்ட ஒருங்கிணைப்பாளர் தியாகராஜன், குழு வழிகாட்டி பேராசிரியர் அனிதா ஆகியோரின் உத்தரவின் பேரில், மோகனூர் முன்னோடி விவசாயி அஜிதன் மேற்பார்வையில், ஒருமாத கால பயிற்சியை மேற்கொள்கின்றனர்.நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் அறிவுரையின் கீழ் செயல்பட உள்ளனர்.

ஒரு மாதம் தங்கியிருக்கும் அம்மாணவியர், மோகனூர், குமாரிபாளையம், ஒருவந்தூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களுக்கு சென்று விவசாயிகள் மேற்கொள்ளும் சாகுபடி முறைகளையும், மேற்கொள்ளப்படும் தொழில் நுட்பங்களையும் அறிந்து கொள்கின்றனர்.
மேலும், பயிர் வகைகள், பயிரிடும் முறைகள் குறித்தும் அறிந்து கொண்டு அறிக்கை தயார் செய்து அதை கல்லூரியில் சமர்ப்பிக்கின்றனர். அவர்கள் அனைவரும் வேளாண் அறிவியல் நிலையத்தில் ஒருமாதம் தங்கியிருந்து இத்தகைய பயிற்சியை மேற்கொள்கின்றனர்.

**மாவுப்பூச்சியை ஒழிக்க அமெரிக்க ஒட்டுண்ணி விவசாயிகளுக்கு இலவசமாக வினியோகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2011,22:55 IST

அன்னூர் : அன்னூர் வட்டாரத்தில் பரவலாக உள்ள மாவுப்பூச்சியை அழிக்க அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒட்டுண்ணி குப்பிகள் இலவசமாக வழங்கப்பட்டன. அன்னூர் வட்டாரத்தில் பப்பாளி உள்ளிட்ட பயிர்களில் மாவுப்பூச்சி தாக்குதல் அதிகமாக உள்ளது. வாழை உள்ளிட்ட பயிர்களில் இலைப்புள்ளி நோய் தாக்குதல் உள்ளது. இவற்றை கட்டுப்படுத்த ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு செயல்விளக்க கூட்டம் ஆம்போதியில் நடந்தது. ஊராட்சி தலைவர் முத்துச்செல்வி தலைமை வகித்தார். தோட்டக்கலை உதவி இயக்குனர் பிரேம் குமார் விவசாயிகளுக்கு அரசு செயல்படுத்தும் நலத்திட்டங்களை விளக்கினார். வேளாண் பல்கலை பேராசிரியர் மரகதம், பல்கலை சார்பில் செயல்படும் திட்டங்களை விளக்கினார். பூச்சியியல் பேராசிரியர் மகாலிங்கம் பேசுகையில்,""வாழையில் இலைப்புள்ளி நோயினை கட்டுப்படுத்த "கார்பன்டிசம்' பூஞ்சாண மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு கிராம் வீதம் தெளிக்க வேண்டும். நோய் அறிகுறி தென்பட்டால், "டில்ட்' மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லி வீதம் கலந்து தெளிக்க வேண்டும். மரவள்ளி பயிரில் தென்படும் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த அமெரிக்காவில் இருந்து தருவிககப்பட்ட "அசிலோ பேகஸ் பப்பாயே' என்னும் ஒட்டுண்ணியை பயன்படுத்தி முழுமையாக கட்டுப்படுத்தலாம்,' என்றார். அதிகாரிகள் கூறுகையில்,""ஒட்டுண்ணி குப்பியை தினமும் 10

நிமிடம் திறந்து வைத்து ஒட்டுண்ணி பிறந்தவுடன் மூடிவிட வேண்டும். இதே போல் நான்கு நாட்கள் தொடர்ந்து செய்தபின் குப்பியை திறந்த நிலையில் பண்ணை வீட்டில் தொங்க விட வேண்டும். ஒட்டுண்ணி விடுவித்த கிராமங்களில் பூச்சி கொல்லி மருந்தை கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது," என்றனர். கூட்ட முடிவில், ஒரு தோட்டத்தில் பூஞ்சாண மருந்து செயல் விளக்கமும், மற்றொரு தோட்டத்தில் ஒட்டுண்ணி திறந்து விடும் செயல்விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது.

**தோட்டக்கலைத்துறை சார்பில் மானியத்திட்டங்கள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2011,22:36 IST

உடுமலை : "தோட்டக்கலைத்துறை சார்பில் நடப்பாண்டில் பல்வேறு மானியத்திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளதாக' உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார். உடுமலை தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் அறிக்கை:மாநில அரசு தோட்டக்கலைத்துறை மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. உடுமலை வட்டாரத்திற்கு நடப்பாண்டில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் மா, கோகோ, திசு வாழை, உதிரி மலர்கள் மற்றும் மிளகாய் பயிரிடும் விவசாயிகளுக்கு உரம் மற்றும் மருந்துகள் 75 சதவீத மானியத்தில் வழங்கப்படுகின்றன. விவசாயிகளுக்கு 26 எக்டருக்கு மா ஒட்டு செடிகள், உரம் மற்றும் மருந்துகளும், தென்னையில் ஊடுபயிராக கோகோ பயிரிடுபவர்களுக்கு 50 எக்டருக்கு கோகோ நாற்றுகள், உரங்கள் மற்றும் மருந்துகள் வழங்கப்படுகிறது. திசு வாழை பயிரிடும் விவசாயிகளுக்கு 30 எக்டருக்கு திசு வாழைக்கன்றுகள் 75 சதவீத மானியத்தில் வழங்கப்படும். வாழை சாகுபடிக்கு 50 எக்டர், உதிரி மலர் சாகுபடிக்கு 14 எக்டர் மற்றும் மிளகாய் சாகுபடிக்கு 5 எக்டர் என்ற அடிப்படையில் 75 சதவீத மானியத்தில் உரம் மற்றும் மருந்துகள் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களில் விவசாயிகள் பயன்பெற, இன்றைய தேதியில் மானிய விண்ணப்பம், கணினிசிட்டா, அடங்கல் உரிமை சான்று, குடும்ப அட்டை நகல் மற்றும் 3 பாஸ்போர்ட் அளவு புகைப்படங்களுடன் உடுமலை ஒழுங்கு முறை விற்பனை கூட வளாகத்தில் இயங்கும் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை அணுகலாம்.இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# 45 பின்தங்கிய மாவட்டங்களுக்கு கூடுதல் அரிசி, கோதுமை ஒதுக்கீடு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உணவு தானியங்கள் கையிருப்பு அதிகரிப்பு வருவதால் பின்தங்கிய நிலையில் உள்ள 45 மாவட்டங்களுக்காக மூன்று மாதங்களுக்கு மத்திய அரசு 2.57 லட்சம் டன் அரிசி, கோதுமையை கூடுதலாக ஒதுக்கீடு செய்துள்ளது. மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் கே.வி. தாமஸ் இத்தகவலை மக்களவையில் தெரிவித்தார்.

உச்ச நீதிமன்ற ஆணை

உச்ச நீதிமன்றம், மே 14 அன்று பிறப்பித்த ஆணையில், மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள 150 மாவட்டங்களுக்கு கூடுதலாக 5 லட்சம் டன் உணவு தானியங்களை ஒதுக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தது.

மேலும் ஒதுக்கப்பட்ட உணவு தானியங்கள் நலிவடைந்த மாவட்டங்கள் மற்றும் நலிவடைந்த பிரிவினரை காலவாரியாக சென்றடைகிறதா என்பதை உறுதி செய்யுமாறு பொது விநியோக முறைக்கான மத்திய கண்காணிப்பு குழுவையும் கேட்டுக் கொண்டிருந்தது.

இதனையடுத்து, மத்திய திட்டக் குழு மற்றும் மாநில அரசுகள் கொடுத்த பட்டியலின்படி 174 பின்தங்கிய மாவட்டங்களை கண்காணிப்புக் குழு தேர்வு செய்துள்ளது.

ஜூன் மாதத்துடன் நிறைவடைந்த வேளாண் பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி வரலாறு காணாத அளவிற்கு அதிகரித்துள்ளது. இதனால் இந்திய உணவுக் கழகத்தின் உணவு தானியங்கள் கொள்முதலும் உயர்ந்து வருகிறது. தற்போது மத்திய அரசின் தானியக் கிடங்குகளில் 6.50 கோடி டன் அரிசி மற்றும் கோதுமை உள்ளது.

பொது விநியோக முறை

சேமிப்புக் கிடங்குகள் நிரம்பி வழிவதால் பொது விநியோக முறையின் கீழ் வரும்

பயனாளிகளுக்கு கூடுதல் அரிசி, கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது என தாமஸ் தெரிவித்தார்.

## நடப்பு பருவத்தில் சர்க்கரை கையிருப்பு 17 சதவீதம் உயரும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நம் நாட்டில், நடப்பு ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் நிறைவடையும் பருவத்தில், சர்க்கரை கையிருப்பு 17 சதவீதம் அதிகரித்து 60 லட்சம் டன்னாக உயரும் என மத்திய உணவுத் துறை அமைச்சர் கே.வி. தாமஸ் தெரிவித்தார்.

நடப்பு பருவத்தில் நாட்டின் சர்க்கரை உற்பத்தி 2.42 கோடி டன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, கடந்த 2009–10 பருவத்தில் 1.88 கோடி டன்னாக இருந்தது. 2010 செப்டம்பர் இறுதி நிலவரப்படி சர்க்கரை கையிருப்பு 51.20 லட்சம் டன்னாக இருந்தது.

தற்போதைய பருவத்தில் சர்க்கரை உற்பத்தி அமோக வளர்ச்சி காண உள்ளதால் சர்க்கரை கையிருப்பும் 55 லட்சம் டன் முதல் 60 லட்சம் டன் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக அளவில் கரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தியில், தென் அமெரிக்க நாடான பிரேசில் முதலிடத்தில் உள்ளது. இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. எனினும் சர்க்கரை பயன்பாட்டில் இந்தியாவே முதலிடத்தில் உள்ளது. உலகின் மொத்த கரும்பு உற்பத்தியில் பிரேசில் மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளின் பங்களிப்பு 50 சதவீதமாகும்.

தினகரன்

# வெங்காய ஏற்றுமதி சரிவால் விலை விரைவில் குறைகிறது

பதிவு செய்த நாள் : 8/4/2011 2:11:32



புனே : பாகிஸ்தான், ஈரான், சீனா நாடுகளின் போட்டியால் இந்தியாவில் இருந்து வெங்காய ஏற்றுமதி ஏப்ரல் முதல் ஜூன் வரை 25 சதவீதம் சரிந்தது. அதனால், உள்நாட்டு விற்பனை விலை விரைவில் சரியும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரை 3 மாதங்களில் இந்தியாவில் இருந்து 6.04 லட்சம் டன் வெங்காயம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அது இந்த ஆண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரை 4.48 லட்சம் டன்னாக குறைந்தது. இது 25 சதவீத சரிவு.

பாகிஸ்தான், சீனாவில் வெங்காய உற்பத்தி இந்த ஆண்டில் சிறப்பாக இருக்கிறது. எனவே, இந்திய ஏற்றுமதி விலையை விட பாகிஸ்தான் வெங்காயம் டன்னுக்கு ரூ.2,250 வரை குறைவு. சீன வெங்காயம் டன்னுக்கு ரூ.3,200 வரை குறைவாக கிடைக்கிறது. எனவே, இந்தியாவில் இருந்து வெங்காய இறக்குமதியை வெளிநாடுகள் குறைத்து விட்டன.
இந்நிலையில், நம்நாட்டிலும் வெங்காய உற்பத்தி போதுமானதாக இருப்பதால், உள்நாட்டு விற்பனை விலை சீராக இருந்து வருகிறது. மொத்த விற்பனையில் கிலோ ரூ.8 ஆக உள்ளது. இது மேலும் குறைந்து, சில்லறை விற்பனையில் ரூ.14ல் இருந்து ஒரு கிலோ வெங்காயத்தின் விலை ஸி10க்குள் வரும் என வர்த்தகர்கள் தெரிவித்தனர்.